பெருந்துறைப்பட்டு கிராமத்தில் மின் இணைப்பு.

*550 வினா— திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், செங்கம் தாலுக்கா, தாண்டராம்பட்டு தொகுதியில் உள்ள பெருந்துறைப்பட்டு கிராம விவசாயிகள் 1972-1977 வரை எத்தனை பேர் மின் இணைப்பு கோரியுள்ளனர்?

(ஆ) எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

(இ) மீதமுள்ளவர்களுக்கு வழங்கப்படாததற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) 20 விண்ணப்பதாரர்கள்.

(ஆ) மூன்று.

(இ) மின் வசதியளிப்பதற்கான திட்ட மதிப்பீடு வருவாய் குறைவாக உள்ளதால் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

திரு. துரை முத்துசாமி: இது எந்தத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டது? விரைவில் முடிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இதற்கென குறிப்பிட்ட திட்டம் இல்லை. இருக்கிற மனுக்களில் 17 மனுக்கள் ஆதாயமற்ற காரணத்தால் எடுத்துக்கொள்ளப்பட முடியவில்லை என்று அவை பெண்டிங்கில் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. த. வேணுகோபால்: 1977-78-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 30,000 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதாக அறிவித்து இருக்கிறார்கள், அந்த அறிக்கையின்படி பெருந்துறைப்பட்டு கிராமத்தில் மின் இணைப்பு தரப்பட்ட பம்ப் செட்களின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அந்த அறிக்கை அண்மையில் தான் வந்திருக்கிறது. இனிமேல் தான் அதுபற்றி பரிசீலிக்கப்பட வேண்டும்.